**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>**
**<u>அசல் வழக்கு எண். 104/2020</u>**
**<u>நாள் 08/09/2025 திங்கட்கிழமை</u>**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – பக்தவச்சலம் (PW1) | த/பெயர் – சேஷமநாயுடு |
| வயது – 74 | தொழில் – |
| விலாசம் – குமரசிரளபாக்கம் கிராமம், பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம் | |

<u>குறுக்கு விசாரணை தொடர்சி–</u>

1. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் யார் செல்லி யார் தயார் செய்தது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது, யார் கூறியது என்றும் தெரியாது, நான் கூறவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ளது பொய்யான வழக்கு என்றும் அதனால் இந்த வழக்கில் எனக்கு சாட்சி கூறுவதற்கான அருகதை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**வாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**